Your Real Estate Investment Consultant
Dedicated for your success
OPPORTUNITIES ARE WAITING...
CALL ME FOR A FREE CONSULTATION
BUY SELL INVEST
DIVAGARAN MANIKKAVASAGAR
Realtor
416.888.7877

32ஆவது ஆண்டில்
விளம்பரம்
கனடாவின் மூத்த தமிழ் இதழ்
Tel: 416-282-8059
email: vlambaram@sympatico.ca
www.vlambaram.com
www.tamilvanakkam.com

துரித பணமாற்றுச் சேவை
மு. காசிப்பிள்ளை சக புத்திரர்கள்
3228 Eglinton Ave. E. Suite #3
(Eglinton & Markham)
Scarborough ON M1J 2H6
Tel: 416-267-8221

நதி: 32 பாலம்: 06 சமூக முன்னேற்றப்பத்திரிகை மாதமிருமுறை இலவசம் MARCH 15, 2022

# இரண்டு ஆண்டுகளை நிறைவு செய்யும் கோவிட்-19!

கொரோனா வைரஸினால் பரவும் கோவிட்-19 பெரும் தொற்றுநோயை உலக சுகாதார நிறுவனம் (WHO) ஒரு பெரும் தொற்றுநோய்ப் பரவல் (Pandemic) என 2020 மார்ச் 11ஆம் திகதி அறிவித்தது.

சீனாவில் உள்ள வுகான் நகரில் 2019 டிசம்பர் மாதத்தில் பரவத் தொடங்கிய இந்நோய் ஒரு பெரும் தொற்று நோய்ப் பரவல் என உலக சுகாதார நிறுவனத்தால் அறிவிக்கப்பட்டு இரண்டு ஆண்டுகளை 2022 மார்ச் 11இல் நிறைவு செய்யும்போது அது உலகம் முழுவதும் உள்ள 453 மில்லியன் மக்களைப் பீடித்திருந்தது. இதில் 6 மில்லியனுக்கு மேற்பட்டோர் உயிரிழந்திருந்தனர். இதன்மூலம் கோவிட்-19 பெரும் தொற்றுநோய் உலக வரலாற்றில் பரவி அதிக மக்களைக் கொன்ற கொடிய தொற்றுநோய்களில் ஒன்று என சரித்திரத்தில் இடம் பெற்றுள்ளது.

இப்பெரும் தொற்று நோயால் 6 மில்லியனுக்கு மேற்பட்டோர் இறந்ததாகப் பதியப்பட்டிருந்தாலும் உண்மையாக இப்பெரும் தொற்றுநோயால் கடந்த இரண்டு வருடங்களில் இறந்தோர் 15 மில்லியனாக இருக்கலாம் என்று கோவிட்-19 பெரும் தொற்றுநோய்ப் பரவலை உலகளாவிய ரீதியில் கணிப்பிட்டுவரும் "The Economist" ஊடகம் தெரிவித்துள்ளது.

அமெரிக்க அதிபர் ஜோ பைடன் தனது இரண்டாவது வருட ஆட்சியை ஆரம்பிக்கும்போது நாட்டு மக்களுக்கு ஆற்றிய உரையில் (State of the Union Address) கோவிட்-19 மக்களை ஆட்டிப் படைத்த காலம் முடிந்துவிட்டது. அது எமது கட்டுப்பாட்டிற்குள் தற்போது உள்ளது என்றார்.

பல தொற்றுநோய் ஆய்வாளர்களின் கணிப்புகள் கோவிட்-19 பெரும் தொற்று நோயை உருவாக்கிய கொரோனா வைரஸை எங்களால் முற்று முழுதாக இவ்வுலகில் இருந்து அழித்து விட முடியாது. மக்கள் அதனுடன் வழமையான ஒரு தொற்றுநோய்ப் பரவல் (endemic) போல் வாழப் பழகிக் கொள்ளவேண்டும் எனக் கூறப்படுவதாக அமெரிக்க ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

Pandemic என்று அழைக்கப்படுவது கட்டுப்பாடு இல்லாமல் விரைவில் உலகம் முழுவதும் பரவும் பெரும் தொற்று




நோயைக் குறிக்கும். இது 'பரந்த அளவில்' என்ற கருத்தில் வரும் கிரேக்கச் சொல்லான Panஇல் ஆரம்பிக்கிறது. இது விரைவில் பரவுவதாலும், பெரிய நிலப்பரப்பில் அதிவேகமாக மக்களிடைய பரவுவதாலும் சுகாதார பராமரிப்பு அமைப்புகளும், மருத்துவர்களும், நோயாளர்களைப் பராமரிக்க முடியாமல் திண்டாடுவர். இதனால் உயிரிழப்புகள் அதிகமாகும். மனித வரலாற்றிலேயே உலகம் முழுவதும் விரைவில் பரவி அதிக மக்களைக் கொன்றது எனக் கூறப்படும் பெரும் தொற்றுநோய் 'Black Death' என்று அழைக்கப்படும் கொள்ளை நோயாகும். இது 1346ஆம் ஆண்டில் பரவத் தொடங்கி 75 மில்லியனில் இருந்து 200 மில்லியன் வரையிலான மக்களை ஒரு தசாப்தத்திற்குள் உலகளாவிய ரீதியில் கொன்றொழித்தது என சரித்திரத்தில் பதியப்பட்டுள்ளது.

Endemic என்று அழைக்கப்படுவது கட்டுப்பாட்டுக்குள் கணிக்கக் கூடிய அளவில் ஒரு பிரதேசத்தில் பரவும் தொற்று நோயைக் குறிக்கும். எதிர்பார்க்கும் அளவில் இது பரவுவதால் சுகாதார பராமரிப்பு அமைப்புகளும், மருத்துவர்களும் திட்டமிட்டு நோயாளர் களைப் பராமரிக்கக் கூடியதாக இருக்கும். இது உயிரிழப்புக்களைக் குறைக்கிறது. இது 'கட்டுப்பாட்டுக்குள்' என்ற கருத்தில் வரும் கிரேக்கச் சொல்லான Enஇல் ஆரம்பிக்கிறது. குளிர்காலத்தில் பரவும் காய்ச்சல் நோய்த்தொற்றை (Seasonal Flu) இதற்கு உதாரணமாகக் கூறலாம்.

"எப்போது ஒரு பெரும் தொற்றுநோய்ப் பரவல் சாதாரண ஒரு வழமையான தொற்றுநோய்ப்பரவலாக மாறும் என்பதற்கு ஒரு திடமாக விதி இல்லை" என அமெரிக்காவில் உள்ள அலபாமா பல்கலைக்கழகத்தில் பேர்மிங்காம் (Birmingham) தொற்றுநோய்கள் பிரிவில் பேராசிரியராகப் பணியாற்றும் மருத்துவர் Paul Geopfert அமெரிக்க ஊடகம் ஒன்றுக்குத் தெரிவித்திருந்தார். "75%ஆன அமெரிக்கர் தடுப்பூசி போட்டுள்ளனர். கோவிட்-19 தொற்றுநோய் கட்டுப்பாட்டுக்குள் வருவதாக நிபுணர்கள் தெரிவிக்கின்றனர்.

தொடர்ச்சி 02ஆம் பக்கம்...)

BUY & SELL THROUGH ME & SEE THE DIFFERENCE!
Kannan Nadarajah
416-889-1083
kannanhomes143@yahoo.com

My services are 100% FREE
For First Time Buyers/Buyers/Tenants
Para Tisi
Call Para 647.286.0096

FOR ALL YOUR COTTAGE NEEDS
SIVAGE SIVAGUMARAN
416-553-8902
sivagehomes@sivage.ca
www.sivage.ca
RE/MAX

Raj A. Rasaratnam
Cell: 416-726-8055
Bus: 416-321-6969
HomeLife/GTA Realty

FOR ALL YOUR REAL ESTATE NEEDS
GEORGE PARANTHAMAN
georgeparan1@gmail.com
416-277-9044
HomeLife GTA Realty Inc.
TRUTH BUILDS TRUST

BUY & SELL THROUGH ME & SEE THE DIFFERENCE!
Sukumar Selvaratnam
Real Estate Broker
416.624.4803
suku07@hotmail.com
www.sukumarhomes.com

DENTAL OFFICE
3351 Markham Road, Unit #129
Markham& Steeles
Tel: 416.609.2022
3150 Eglinton Ave East, Unit #5
Markham & Eglinton
Tel: 416.264.3232
Dentistry for children, adults and seniors
Dr.Iru Vijayanathan
BDS, FAGD, MFDS RCPS(Glasg.)
Dental Surgeon

வீடு வாடகைக்கு... வாங்க/ விற்க...
Rathiga Thillaivannan
Broker
Dir: 647.839.0079
Re/Max Realtron Realty Inc




# இரண்டு...

01ஆம் பக்கத்தொடர்ச்சி

இந்நோய் எம்மைக் கட்டுப்படுத்திய காலம் போய், இப்போது நாம் இந்நோயைக் கட்டுப்படுத்தும் காலம் வந்துள்ளது. எனவே, அமெரிக்காவில் கோவிட்-19 சாதாரண ஒரு வழமையான தொற்று நோய்ப் பரவலாக மாறுகிறது" என அமெரிக்க ஊடகமான abc News கோவிட்-19 தொற்றுநோயின் இரண்டாவது ஆண்டு நிறைவையொட்டி வெளியிட்ட செய்தியில் தெரிவித்துள்ளது.

கோவிட்-19 தொற்று நோய்ப்பரவலின் இரண்டாவது ஆண்டு நிறைவு நாளான 2020 மார்ச் 11இல் கனடிய அரசு வெளியிட்ட தகவலின்படி கனடியச் சனத் தொகையில் 85%ஆனோர் கோவிட்-19 தடுப்பூசியில் ஒன்றையும், 80%ஆனோர் இரண்டு தடுப்பூசிகளையும், 46%ஆனோர் மூன்று தடுப்பூசிகளையும் போட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அல்பேட்டா மாகாணத்தின் தலைமை மருத்துவ அதிகாரி வைத்தியர் Deena Hinshaw ஊடகங்களுக்குத் தெரிவிக்கையில், "இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு மக்கள் கோவிட்-19 தொற்றுநோயை ஒரு பெரும்தொற்று நோயில் இருந்து சாதாரண வழமையாகப் பரவும் தொற்று நோயாகப் பாவித்து வாழ மாறவேண்டும்" என்று கூறினார்.

அல்பேட்டாவில் மார்ச் 1ஆம் திகதியில் இருந்து முகக்கவசம் அணிவது பொதுப் போக்குவரத்து வாகனங்கள் மற்றும் முதியோர் பராமரிப்பு இல்லங்கள் போன்ற இடங்களைத் தவிர ஏனைய இடங்களில் கட்டாயப்படுத்தப்படமாட்டாது. பாடசாலைகளிலும் மாணவர்கள் முகக்கவசம் அணியத் தேவையில்லை. அனைத்து பொழுதுபோக்கு இடங்கள் மற்றும்


Dr. Deena Hinshaw, Alberta's CMOH Thanks: CBC

பொதுஅரங்குகளில் அனுமதிக்கப்படுவது பற்றிய கட்டுப்பாடுகள் எல்லாம் நீக்கப்பட்டுள்ளது.

கோவிட்-19 தொற்று நோய்ப்பரவலின் இரண்டாவது ஆண்டு நிறைவு நாளான 2020 மார்ச் 11இல் ஒன்ராறியோ மாகாண அரசு வெளியிட்ட தகவலின்படி ஒன்ராறியோ மாகாண சனத்தொகையில் 86%ஆனோர் கோவிட்-19 தடுப்பூசியில் ஒன்றையும், 81%ஆனோர் இரண்டு தடுப்பூசிகளையும், 47%ஆனோர் மூன்று தடுப்பூசிகளையும் போட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஒன்ராறியோ மாகாணத்தில் பணியாளர் கட்டாயமாகக் கோவிட்-19 தடுப்பூசிகள் போட்டிருக்க வேண்டும் என்ற கட்டுப்பாடு மார்ச் 14ஆம் திகதி முதல் நீக்கப்பட்டுள்ளது. மார்ச் 21ஆம் திகதியில் இருந்து முகக்கவசம் அணிவது பொதுப் போக்குவரத்து வாகனங்கள் மற்றும் முதியோர் பராமரிப்பு இல்லங்கள் போன்ற இடங்களைத் தவிர ஏனைய இடங்களில் கட்டாயப்படுத்தப்படமாட்டாது. பாடசாலைகளிலும் முகக்கவசம் அணியத் தேவையில்லை. ஏப்பிரல் 27ஆம் திகதியில் இருந்து ஒன்ராறியோ மாகாணத்தில் ஓர் இடத்திலும் முகக்கவசம் அணிவது கட்டாயப்படுத்தப்படமாட்டாது.

ஒன்ராறியோ மாகாணத்தின் தலைமை மருத்துவ அதிகாரி வைத்தியர் Kieran Moore ஊடகங்களுக்குத் தெரிவிக்கையில், "நாங்கள் இப்போது கோவிட்-19 தொற்றுநோயை நிர்வகிக்கவும், அத்துடன் வாழவும் பழகிவிட்டோம். முகக்கவசம் அணிய வேண்டும் என்ற ஆணையை அகற்றுவதால் தொற்றுநோய் பரவும் ஆபத்து நீங்கிவிட்டது என்று அர்த்தம் அல்ல. தொற்றுநோய்ப் பரவல் நிறுத்தப் பட்டு விட்டது என்றும் அர்த்தமல்ல" என்று கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், "கோவிட்-19 தொற்றுநோய் வைரஸின் இன்னொரு திரிபு பரவத் தொடங்கினால் நாங்கள் மீண்டும் முகக்கவசம் அணிய வேண்டி வரும். அத்துடன் நோயால் இலகுவில் பாதிக்கப்படக்கூடிய நிலையில் உள்ளோர், முகக்கவசம் அணிய வேண்டும் என்ற ஆணையை நாங்கள் நீக்கினாலும் தொடர்ந்தும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளைக் கடைப்பிடிக்க வேண்டும். தேவை ஏற்படின் முகக்கவசம் அணிவதை மீண்டும் தொடங்க நாம் அனைவரும் தயாராக இருக்க வேண்டும்" என்று கூறினார்.

தொற்று நோய் மருத்துவரான வைத்தியர் Gerald Evans, CBC ஊடகத்திற்குத் தெரிவிக்கையில், "பொழுதுபோக்கு இடங்கள், பொதுஅரங்குகள் எல்லாவற்றிலும் அனுமதிக்கப்படுவோரின் வரையறைகளை அகற்றுவது, தடுப்பூசிச் சான்றிதழ்கள் பாவிப்பதை நிறுத்துவது மற்றும் முகக்கவசம் அணியவேண்டும் என்ற ஆணையை நீக்குவது எல்லாம் விரைவில் ஒரு குறுகியகால இடைவெளியில் நடைபெறுகிறது. சுற்றுப்புறச் சூழலின் வெப்பநிலை உயர்ந்து வைரஸின் செயற்பாடுகள் இயற்கையாகவே குறையும் வரையாதல் முகக்கவசம் அணியவேண்டும் என்ற ஆணையை வைத்திருக்க வேண்டும்" என்றார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், "தொற்றுநோய்ப் பரவலில் இருந்து வெளியேற வேண்டும். நாங்கள் 2020இற்கு முன்பு இருந்த நிலைக்குத் திரும்பிச் செல்ல வேண்டும். எல்லோரையும் போல் நானும் இவற்றிற்கு மிகவும் ஆர்வமாக உள்ளேன். ஆனால், நாங்கள் மிகவும் கவனமாகவும், நிதானமாகவும்தான் முன்னேற வேண்டும்" என்றார்.

தொடர்ச்சி 11ஆம் பக்கம்...)



Available Till Midnight
Including Weekends & Holidays

# ANTON DHARMASEELAN

MORTGAE AGENT

#1 Mortgage Agent in GTA
#2 in Canada

## CALL ME FIRST
## FOR ALL YOUR MORTGAGE NEEDS

| | |
|---|---|
| PURCHASE | MAJOR BANKS |
| REFINANCE | ALTERNATIVE LENDERS |
| SELF EMPLOYED | B LENDERS |
| BAD CREDIT | CREDIT UNIONS |
| INVESTMENT PROPERTY | TRUST COMPANIES |
| RENEWAL | PRIVATE LENDERS |

# 416 704 1200

anton@myhomemls.ca

MORTGAGE ALLIANCE
Broker # 10530
#200, 2005 Sheppard Ave. E.
Toronto, ON M2J 5B4

FAX: 1 866 566 3068

# நாமும் நமது இல்லமும் 603

## கனடிய ஆதன சந்தைக்கு 2022இல் என்ன நடக்கலாம்?



ராஜா மகேந்திரன், P.Eng.
raja@mahendran.ca
416.315.9397/416.321.6969

கடந்த 20 வருடங்களாக ஆதனவிலை அதிகரித்தே செல்கின்றது. 2008/2009, 2017 மற்றும் 2020இன் ஒரு குறிப்பிட்ட காலம் தவிர தொடர்ச்சியான விலை அதிகரிப்பே காணப்படுகின்றது. எனினும் கடந்த இரு வருடங்களில் ஏற்பட்ட விலை அதிகரிப்பு எதிர்பாராததாகக் காணப்படு கின்றது. இதற்குப் பல காரணங்கள் உள்ளன. அவற்றில் சிலவற்றை மட்டும் பார்ப்போம்.

வயதான கனடியர்களின் எண்ணிக்கை தொடர்ச்சியான அதிகரிப்பு, பிறப்பு வீதம் குறைவு. இதனால் மேலதிக புதியவர்களைக் கனடா ஏற்கின்றது.

### கனடிய சரித்திரத்தில் காணாத குறைந்த வட்டி வீதம்

1.3% வட்டி வீதத்திற்குப் பணத்தைக் கடன் எடுத்து 20% அளவிலான ஆதன விலை அதிகரிப்பில் முதலீடு செய்வது இப்பொழுது காணப்படுகின்றது. குறைந்தளவு ஆதனங்களே அமைக்கப் படுகின்றது. ஆனால் அதிகமானோர் கொள்வனவு செய்கின்றனர். 10 வருடங்களிற்கு முன்பாகத் திட்டம் போட்டிருக்க வேண்டிய அரசுகள் காலத்தை வீணாக்கி விட்டன. புதிய மக்களைக் கொண்டுவர நினைத்தவர்கள் இவர்கள் குடியிருக்க வேண்டிய, போதிய ஆதனங்களை உருவாக்கத் தவறி விட்டனர்.

ஏற்கனவே ஆதனத்திற்குத் தட்டுப்பாடான இக்காலத்தில் மேலும் 400,000இற்கு மேற்பட்ட புதியவர்களை 2022இல் கனடா ஏற்கத் திட்டம் இட்டுள்ளது. இதன் தொடர்ச்சி மேலும் சில வருடங்கள் தொடர இருக்கின்றது. அத்துடன் ரஷ்யா - உக்ரைன் போரில் இடம்பெயர்ந்தவர்களை பிரத்தியேக வானூர்தி மூலம் கனடாவிற்குக் கொண்டுவரக் கனடியப் பிரதமர் திரு. ஜஸ்ரின் ரூடோ (Justin Trudeau) திட்டமிட்டுள்ளார்.

இன்று கனடிய ஆதனத்தில், வியாபார மாக முதலீடு செய்பவர்களின் ஆசை, விருப்பம் தொடர்ந்து இருக்குமா என்பது கேள்விக்குறியே.

1975இற்கும் 2000ஆம் ஆண்டிற்கும் இடைப்பட்ட காலப்பகுதியில் ஒரு சீரான வீதத்தில் ஆதன விலை அதிகரித்து வந்தது. பணவீக்கத்தைக் கணக்கில் எடுத்தால் ஆதன விலை அதிகரிப்பு வருடத்திற்கு அரை (½%) வீதம் எனக் கொள்ளலாம். எனினும், 2015இற்கு முற்பட்ட பகுதியிலும் பிற்பட்ட பகுதியிலும் நிலைமை மாறாகவே காணப்படுகின்றது.

2000இற்கும் 2015இற்கும் இடைப்பட்ட காலத்தில் வட்டிவீத குறைப்பு, பணவீக்கம், சம்பள அதிகரிப்பு ஆதன வியாபாரத்திலும் விலையிலும் மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது. இந்தக் காலத்தில் கனடிய நாட்டின் பெருமை உலகளாவிய ரீதியில் பெரிதாக்கப்பட்டது. அதிக மக்கள் வரத் தொடங்கினர். கனடிய அரசும் இதற்கு ஆதரவு கொடுத்தது. இந்தக் காலத்தில் (2000-2013) கனடிய முக்கிய பதினொரு (11) நகரங்களில் சராசரியாக 146% விலை அதிகரிப்பு ஏற்பட்டது. பணவீக்கத்தைக் கருத்தில் கொள்ளும்போது, இப்பெறுமதி 131%ஆகக் காணப்படுகின்றது.

கனடிய மக்களின் வருமானத்தின் அதிகரிப்புடன் ஒப்பிடும்போது ஆதன விலை அதிகரிப்பு குறைவானதாகவே காணப்படுகின்றது. வட்டிவீத அதிகரிப்பு, நிச்சயமாகப் பாதிப்பை ஏற்படுத்தும் என்றே தோன்றுகின்றது. அண்மையில் (மார்ச் 02, 2022) ஏற்பட்ட 0.25% பெரிய பாதிப்பை ஏற்படுத்தப் போவதில்லை. தொடர்ச்சியான வட்டி அதிகரிப்பு நிச்சயம் தாக்கத்தை ஏற்படுத்தும். எனினும், கொரோனா ஏற்படுத்திய விலை அதிகரிப்பு, இப்பொழுது ஏற்பட்டுள்ள உக்ரைன் - ரஷ்யா போர் போன்றவை புதிய மாற்றங்களை ஏற்படுத்தலாம்.

ஏற்கனவே மார்ச் 01ஆம் திகதியிலிருந்து இதுவரை $1,500,000 ($1.5 மில்லியன்) இற்கு மேற்பட்ட ஆதன வியாபாரத்தில் தாக்கத்தைக் காணக்கூடியதாக உள்ளது.

எரிபொருளின் அதிக விலை அதிகரிப்பு, பொருட்களின் விலை அதிகரிப்பு, தொழிலிற்குப் போதிய வேலையாட்கள் கிடைக்காமல் இருப்பது, பொருட்களின் தட்டுப்பாடு (Supply Chain) போன்றவை கனடிய மக்களிற்கு ஒரு நிலையான



முடிவை எடுப்பதில் சிக்கலை ஏற்படுத்தியுள்ளது. இதனால், ஆதனம் வாங்குவோர், தமது ஆதனம் வாங்கும் கனவை தள்ளிப்போடக் கூடிய சந்தர்ப்பமே அதிகம். ஏற்கனவே அதிக விலைக்கு வாங்கிய ஆதனங்கள் 2 அல்லது 3 மாதங்களில் வாங்கியவர்களின் பெயர்களிற்கு மாற்ற வேண்டிய காலத்தில் (Completion of Transaction), வாங்கிய விலையின் பெறுமதியை மதிப்பீடு செய்யும் நிறுவனம் (Appraisal Value) கொடுக்குமா? என்ற கேள்வியும் யதார்த்தமானதே.

அவ்வாறான நிலைமை ஏற்பட்டால் வாங்கியவர்களின் நிலைமை இக்கட்டாக லாம். இதனால் புதிதாக ஆதனங்களை வாங்க இருப்போர் அதிக கவனம் எடுக்கவேண்டிய நிலைமை உருவாகலாம். இது தொடர்ச்சியான ஆதன அதிகரிப்பில் ஒரு முரண்பாட்டை உருவாக்கலாம்.

**உங்களை நீங்களே மிஞ்ச வேண்டும்;**
**இதுவே உங்களின் வேலையாக இருக்கட்டும்.**




## உலக தண்ணீர் தினம்



world water day 22.03.2022

தண்ணீர் இன்றி பயிர்கள் இல்லை,
தண்ணீர் இன்றி உயிர்கள் இல்லை.
தண்ணீர் இன்றி சுத்தம் இல்லை,
தண்ணீர் இன்றி தொழில்கள் இல்லை,
தண்ணீர் இன்றி வீடுகள் இல்லை,
தண்ணீர் இன்றி காடுகள் இல்லை,
தண்ணீர் இல்லையேல் பூமி தகிக்கும்,
தண்ணீர் இல்லையேல் உயிர்கள் தவிக்கும்,
தண்ணீர்தான் நம் தாகம் தணிக்கும்,
நீரின்றி அமையாது உலகு என்றே
தண்ணீர் பற்றி வள்ளுவர் உரைத்தார்.
கடலின் தண்ணீர் ஆவியாகி, மழையாய்ப் பொழியுது மக்கள்மீது,
பெய்த மழைநீர் வீணாகாமல் சேமித்தாலே உலகம் செழிக்கும்,
தண்ணீர் சிக்கனம் தேவை இக்கணம் என்பதை நமது மனதில் வைக்கணும்.

சிலேடை சித்தர் சேது சுப்ரமணியம்

# MORTGAGE & LINE OF CREDIT

⇒ நல்ல ரேட்ல மோட்கேஜ் ( OAC*)

⇒ லைன் ஒப் கிரெடிட்(HELOC - No Income Required*)

⇒ **Private Mortgage** (No Income Verification)

⇒ ரீபைனான்ஸ்,Title Transfer, ரினிவல்

⇒ 2வது, 3வது மோட்கேஜ் (Funded within 48hrs)

⇒ பாங்க்ரப்சி, புரபோசல் செய்தோருக்கான மோர்ட்கேஜ்

⇒ எல்லா கடனையும் ஒரே பேமென்டாக்க


⇒ பவர் ஒப் சேல் பிரச்சனையிலிருந்து விடுபட

**கடைசி நேரத்தில் மோட்கேஜ் கிடைக்காமல்**
**வாங்கிய வீட்டை கைவிடும் நிலையில் உள்ளீர்களா?**

MORTGAGE CLINIC

www.mortgageclinic canada.com

416-613-2788 / 416-816-9011



ஜெ(Jey)இராசதுரை
MBA. BBA (Hon) AMP

Team Leader / Mortgage
& Real Estate Broker

**Cell : 416-624- 4843**



RIGHT AT HOME REALTY INC.

எமது முகவரி
1504 Markham Rd,
Toronto, ON, M1B 2V9
(Markham & HWY 401)

MORTGAGE ALLIANCE
RIGHTBROKER = RIGHTMORTGAGE
Lic # 10530

Brokerage: 1396 Don Mills Rd, Unit B121Toronto ON M3B 0A7 Corp office : 200-2005 Sheppard Ave E, Toronto ON M2J 5B4

# NOTARY PUBLIC & LEGAL SERVICES

**Notarizations, Certifications & Commissioning**

* Affidavits
* Certification of True Copy
* Preparation and Notarize the Letter of Invitation
* Commissioning Statutory Declarations and Solemn Affirmations
* Power Of Attorney & Will

* Small Claims
* Landlord & Tenant Matters
* Business Registration & Renewal

AAA Legal Services

AAA LEGAL SERVICES
PROFESSIONAL CORPORATION

**Call:(416) 814 -7450**
(Markham Rd & HWY 401 - Scarborough)

** Promotional Rate for students $20per sign

# பயங்கரவாத தடைச்சட்டத்தை அனைத்து மக்களும் உணரும் காலம்!




பயங்கரவாத தடைச்சட்டத்தை முழுமையாக நீக்க வேண்டும் என்று கோரி தமிழ் தேசியக் கூட்டமைப்பினால் மேற்கொள்ளப்பட்டு வரும் கையெழுத்துப் போராட்டம் நாடு முழுவதும் வெற்றிகரமாக நடைபெற்று வருகின்றது. ஒரு மாதத்தைக் கடந்து இந்தப் போராட்டம் தொடர்ந்து நடந்து வருகின்றது. தமிழ், முஸ்லிம், சிங்கள மக்களும் இதில் கலந்து கொண்டு கையெழுத்திட்டு வருகின்றனர்.

பயங்கரவாத தடைச்சட்டம் தமிழ் மக்களுக்கு எதிராகவே செயற்படுத்தப் பட்டு வந்தது. தமிழ் இளைஞர் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டு, விடுதலையுமின்றி, விசாரணைகளுமின்றி வருடக் கணக்கில் சிறைகளில் வாடுகின்ற மைக்குப் பயங்கரவாத தடைச்சட்டமே காரணம் என்பது அனைவருக்கும் தெரியும்.

இன்று அந்த சட்டம் முஸ்லிம்களுக்கும், சிங்களவர்களுக்கும் எதிராகவும் பயன் படுத்தப்படுகின்றது. இப்போதுதான் இதன் தாக்கத்தை முஸ்லிம்களும் சிங்களவர் களும் உணர்ந்து கொண்டுள்ளனர். இந்த நிலையில்தான் தமிழர் தரப்பினால் ஆரம்பிக்கப்பட்டு மேற்கொள்ளப்பட்டு வரும் இக்கையெழுத்துப் போராட்டத்தில் மூவினத்தவரும் கலந்து கொண்டு ஆதரவளித்து வருகின்றனர். இதுவொரு நல்ல தருணமாகவே அமைந்துள்ளது எனலாம். ஏனெனில், தமிழ் மக்களின் பிரச்சினைகளை சிங்கள மக்கள் மத்தியில் எடுத்து விளக்க வேண்டும். அதற்கான பொறிமுறை ஒன்றை ஏற்படுத்த வேண்டும் என்பது முக்கியமான ஒன்றாக உள்ளது.

தமிழ் மக்கள் கோரும் அரசியல் தீர்வை வழங்கினால் நாடு பிளவுபடும் என்றும், தமிழர் கோரும் சமஸ்டி அடிப்படையிலான தீர்வு தனிநாட்டுக் கோரிக்கைக்கு ஒப்பானதென்றும் சிங்கள மக்கள் மத்தியில் சிங்கள அரசியல்வாதிகளால் பிரச்சாரம் செய்யப்பட்டுள்ளது. சிங்கள மக்கள் மனங்களில் இந்தப் பிரச்சாரம் ஆழமாகப் பதிந்துள்ளது.

சிங்கள இனவாத அரசியல்வாதிகளின் இந்தத் தவறான கருத்தை இல்லாமல் செய்ய வேண்டுமானால், சிங்கள மக்கள் மத்தியில் தமிழர் களமிறங்க வேண்டும். அவர்கள் மத்தியில் தெளிவுபடுத்தல்களை மேற்கொள்ள வேண்டும். இதுவொரு அத்தியாவசியமான செயற்பாடு. அதுமட்டுமன்றி அரசாங்கத்தின் தவறான நடவடிக்கைகளால் சிங்கள மக்கள் பாதிக்கப்படும்போது தமிழ் மக்கள் அவர் களுக்காகக் குரல்கொடுக்க வேண்டும். இதன் மூலமாக சிங்கள மக்களின் ஆதரவை தமிழ் மக்கள் பெற்றுக்கொள்ள முடியும். இது சிரமமானதொரு காரியம் என்றாலும் கூட அதனைச் செய்தே ஆகவேண்டும்.

இலங்கை அரசாங்கத்திற்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையில் சமாதானப் பேச்சு வார்த்தை நடைபெற்ற காலத்தில் சிங்கள மக்கள் மத்தியில் தமிழ் மக்களின் பிரச்சினைகள் தொடர்பில் விளங்கப்படுத் தும் நடவடிக்கைகளும் மேற்கொள்ளப் பட்டன. இதில், விடுதலைப்புலிகளால் வெளியிடப்பட்ட ‘தேதுன்ன’ (வானவில்) என்ற சிங்களப் பத்திரிகை முக்கியமான தொன்றாகும். இதனை நாட்டின் சிங்களக் கிராமங்களில் உள்ள சிங்கள மக்களும் தேடி வாசித்தனர். சிங்களப் பத்திரிகை யாளர்கள் இந்தப் பத்திரிகைக்கான பணிகளை வட பிரதேசத்திற்கு வந்து செய்து கொடுத்தனர்.

தமிழ் மக்களின் போராட்டம் நியாயமானது- அது சிங்கள மக்களுக்கு எதிரானது அல்ல என்பதை சிங்கள மக்களுக்குத் தெளிவுபடுத்த வேண்டும் என்கின்ற நோக்கத்திலேயே விடுதலைப்புலிகள் அந்த சிங்களப் பத்திரிகையை வெளி யிட்டனர். சமாதானப் பேச்சுவார்த்தை காலத்திற்கு முன்பாகவே சிங்கள மொழியில் வானொலி சேவை ஒன்றையும் விடுதலைப்புலிகள் நடத்தி வந்தனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

சமாதான காலத்தில் சிங்கள எழுத்தாளர் கள், புத்திஜீவிகள், கலைஞர்கள், ஊடக வியலாளர்கள் தமிழ் பிரதேசங்களுக்கு வரக்கூடியதான நிகழ்வுகளும் ஏற்பாடு செய்யப்பட்டன. இதில் யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற ‘மானுடத்தின் கூடல்’ என்ற நிகழ்வும் சிங்களக் கலைஞர்களால் கொழும்பில் ஏற்பாடு செய்யப்பட்டு தமிழ் எழுத்தாளர்கள், கலைஞர்கள், புத்திஜீவிகள் கலந்து கொண்ட ‘தமிழ் - சிங்களக் கலைக்கூடல்’ என்ற நிகழ்வும் மிக முக்கியமானவை.

யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற ‘மானுடத்தின் கூடல்’ நிகழ்வில் கலந்துகொள்ள தென்னிலங்கையிலிருந்து வருகை தந்தவர்களுக்கு விடுதலைப் புலிகள் முழுமையான பாதுகாப்பை வழங்கியிருந்தனர். ஆனால், கொழும்பில் நடைபெற்ற ‘தமிழ்- சிங்கள கலைக்கூடல்’ நிகழ்வின் முதல்நாள் அமர்விலேயே குழப்பம் ஏற்படுத்தப்பட்டது. நிகழ்வு நடைபெற்ற கொழும்பு நகர மண்டபத்தில் தாக்குதல் நடத்தும் திட்டத்துடன் சிங்களத் தீவிரவாதிகள் குழுவொன்று நுழைந்தது.



நிகழ்வினை ஏற்பாடு செய்த சிங்கள இளைஞர்களே அவர்களுடன் போராடிக் கலைத்தனர். அந்தக் கைகலப்பில் தமிழரைப் பாதுகாக்கப் போராடிய சிங்கள இளைஞர்களுக்கு இரத்தக் காயங்கள் ஏற்பட்டன. இவை மறக்கமுடியாத வரலாற்று நிகழ்வுகள்.

தனித் தமிழீழத்திற்காக ஆயுதப் போராட்டம் நடைபெற்ற காலத்தில் தமிழ் மக்களின் போராட்டத்தை ஏற்றுக் கொள்ளும் சிங்களத் தரப்பினரை உருவாக்கும் நடவடிக்கைகள் ஏற்படுத்தப் பட்டன என்பதுதான் இங்கு குறிப்பிடத் தக்க விடயமாகும். பின்னர் இந்த விடயங்கள் யாவும் கைவிடப்பட்டமை துரதிஸ்டவசமானது.

போர் முடிவுற்று 12 வருடங்களாகிவிட்ட நிலையில்- முற்றுமுழுதான ஜனநாயக வழியிலான போராட்டத்தை தமிழ் மக்கள் மேற்கொண்டுள்ள நிலையில் தமிழ் அரசியல்வாதிகள் சிங்கள மக்கள் மத்தியில் எவ்வித பிரச்சார நடவடிக்கை களையும் மேற்கொள்ளவில்லை. அதற்கான வேலைத்திட்டம் ஒன்றையும் அவர்கள் வடிவமைக்கவில்லை. தமிழ் மக்களிடம் வாக்குத் திரட்டும் முனைப்பு களில் மட்டுமே அவர்கள் ஈடுபட்டு வந்தனர். அதற்காக சிங்கள மக்களை வெறுப்பூட்டும் கருத்துக்களையும் அவர்கள் வெளியிட்டனர். இது இனவாத சிங்கள அரசியல்வாதிகளுக்கே வாய்ப்பாக அமைந்துவிட்டது. அது மட்டுமன்றி, மலையகத்தில் வாழும் தமிழர் பற்றியோ, தமிழ் பேசும் முஸ்லிம் மக்கள் பற்றியோ அதிக அக்கறை செலுத்தப்படவில்லை. அவர்களும் தங்களது அரசியலுக்காகவே தங்கள் தரப்பு மக்களை பயன்படுத்தினர்.

இவ்வாறானதொரு சூழ்நிலையில் தான் தனிச் சிங்கள மக்களின் வாக்குகளினால் கோட்டாபய ராஜபக்ஸ கடந்த 2019ஆம் ஆண்டு ஜனாதிபதியானார் இன்று நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார வீழ்ச்சியும், விலைவாசி உயர்வினால் ஏற்பட்டுள்ள வாழ்வாதார பிரச்சினையும் சிங்கள மக்கள் மத்தியில் வெறுக்கப்படுகின்ற ஒருவராக கோட்டாபய ராஜபக்ஸ மாறியுள்ளார்.

அரசாங்கத்திற்கு எதிராகப் போராட்டங் களை நடத்தும் சிங்களத் தரப்பினர் மீதே பயங்கரவாத தடைச்சட்டம் பாய்கின்ற நிலைமை ஏற்பட்டுள்ளது. உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் உண்மை யான குற்றவாளிகளை அடையாளம் காண்பதற்கு அப்பால் அப்பாவி முஸ்லிம்கள் பயகரவாத தடைச்சட்டத்தால் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்படுகின்றனர்.

தமிழ் மக்களை துன்புறுத்திய இந்த பயங்கரவாத தடைச் சட்டத்தின் கொடூரத்தை இன்று சகல இன மக்களும் உணர்ந்து கொள்கின்றனர். இந்த நிலையிலேயே நாட்டில் பாதிக்கப்பட்ட அனைத்து மக்களும் பயங்கரவாத தடைச் சட்டத்திற்கு எதிராகக் கையெழுத்திட்டு வருகின்றனர். இதனை ஒரு நல்ல சந்தர்ப்பம் என்றே கூறலாம். இதற்கும் அப்பால் சென்று தமிழ் மக்களின் பிரச்சினை தீர்வு தொடர்பில் சிங்கள மக்களுக்கு தெளிவுபடுத்தும் செயற்பாடு களையும் தமிழர் தரப்பு அரசியல்வாதிகள் முன்னெடுக்க வேண்டும். இன்று நடைபெறும் கையெழுத்துப் போராட்டத்தை இதற்கான தொடக்கப் புள்ளியாக மாற்ற வேண்டும்.

துரோகங்கள் நமக்கு
கற்றுக் கொடுப்பவை
ஒன்று தான்
சற்றே சுயநலமாய்
இருந்திருக்கலாம்
என்று..

விளம்பரம்
VLAMBARAM
32ஆவது ஆண்டில்
பதிப்பாளர்: ராஜா மகேந்திரன்
ஆசிரியர்: சத்தியா மகேந்திரன்
முகாமையாளர்: கமல் செல்லையா
ஊடகப் பொறுப்பாளர்: விஜய் செல்லையா
அலுவலக பொறுப்பாளர்: பிரசாந்தி அருள்தாசன்
பதிப்பு: Canyon Press Inc.

‘விளம்பரம் பப்ளிகேஷன்ஸ் இங்’ நிறுவனத்தால் வெளியிடப்படும் ‘விளம்பரம்’ பத்திரிகையில் பிரசுரிக்கப்படும் ஆக்கங்களுக்கு எழுத்தாளர்களும், விளம்பரங்களுக்கு விளம்பரதாரர்களுமே பொறுப்பாளர்கள். விளம்பரம் பத்திரிகையில் பிரசுரிக்கப்படும் ஆக்கங்களை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ ஆசிரியரின் அனுமதியின்றி மறுபிரசுரம் செய்தலாகாது.

Vlambaram Publications Inc.
GTA SQUARE, 5215 FINCH AVE. E.,
#201, TORONTO, ON M1S 0C2, CANADA
TEL: 416-282-8059/ FAX: 416-286-0344
email:vlambaram@sympatico.ca
web: www.vlambaram.com
Vlambaram Publications Inc. 2020 All Rights Reserved

MATH & PHYSICS TUTORING
By a well-qualified and experienced teacher
For all grades from Grade 4 to 1st year of university
Special classes
Advanced function
Calculus & vectors
Data management
All Classes available in Scarborough & Stouffville
Contact: 647.340.9490 / 416.732.2228

Mr.S.J.Xavier (Teacher)

# இலங்கையின் பொருளாதார நெருக்கடிக்குக் கொரோனா வைரஸ்தான் காரணமா?

**- விகிர்தன் -**

இலங்கையில் ஏற்பட்டுள்ள பாரிய பொருளாதார நெருக்கடிக்குக் கொரோனா தொற்றுப் பரவலே காரணம் என்று அரசாங்கம் கூறிவந்தது. நாட்டில் கொரோனா பரவல் அதிகரித்த வேளையில் நாட்டை முடக்குமாறு சுகாதார தரப்புகளிடமிருந்து கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டன. வெளிநாட்டவர் வருகையை சில காலம் நிறுத்தி வைக்குமாறும் ஆலோசனைகள் வழங்கப்பட்டன. ஆனால், ஆரம்பத்தில் ஊரங்கு சட்டம், பயணக் கட்டுப்பாடுகள் போன்றவற்றை அமல்படுத்திய அரசாங்கம் பின்னர் அதனைக் கைவிட்டது.

கொரோனா பரவலை கட்டுப்படுத்த இறுக்கமான நடைமுறைகளை மேற்கொள்ள வேண்டும் என்று கூறிய அரசாங்கத்தின் அமைச்சர்களை நாட்டின் ஜனாதிபதி அச்சுறுத்தியதாகவும். தகவல்கள் வெளியாகின. உதாரணத்திற்கு அரசாங்கத்தின் பங்காளியாகவும், அமைச்சராகவும் இருந்த விமல் வீரவன்ச (தற்போது அவர் அமைச்சுப் பதவியிலிருந்து நீக்கப்பட்டு விட்டார்) சில தினங்களுக்கு முன்னர் ஒரு தகவலை வெளிப்படுத்தியிருந்தார். தன்னை தொலைபேசியில் தொடர்புகொண்ட ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஸ "நாட்டை மூடுமாறு கூறுகின்றீர்களா? முதலில் உங்கள் பதவி விலகல் கடிதத்தை சமர்ப்பியுங்கள்" என்று அச்சுறுத்தியதாகத் தெரிவித்திருந்தார். அவர் பதவி நீக்கம் செய்யப்படுவதற்கு சில மாதங்களின் முன்னர் நடைபெற்ற சம்பவம் இது. இதைப் போன்றே வேறு சிலர் மீதும் ஜனாதிபதி தனது கோபத்தை வெளிப்படுத்தியதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

பின்னர், நாடு எந்த சந்தர்ப்பத்திலும் மூடப்படவில்லை. தற்போது கொரோனா பரவல் நாட்டில் குறைவடைந்துள்ளது. நாளாந்த தொற்றாளர் எண்ணிக்கையும், இறப்பு எண்ணிக்கையும் குறைந்த அளவிலேயே பதிவாகி வருகின்றது. கொரோனாவால் இப்போது தொழில் முடக்கம் எதுவுமில்லை. ஆனாலும், இலங்கையின் பொருளாதாரம் நாளுக்கு நாள் வீழச்சியை நோக்கியே செல்கின்றது. இதற்கு காரணம் என்ன?

உண்மையில், நாட்டில் தொழில்கள் பாதிக்கப்பட்டு, பொருளாதாரம் தளம்பல் நிலைக்கு வந்ததில் கொரோனா பரவல் ஒரு காரணியாக இருந்துள்ளது என்பதை ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும். ஆனால், அதுவே முழுமையான காரணி அல்ல என்பது இப்போது வெளிப்படையாகத் தெரிகின்றது. பொருளாதாரம் தொடர்பில் சரியான திட்டமிடல், முறையான முகாமைத்துவம் என்பன இல்லாமையே இன்றைய இந்த நிலைமைகளுக்கு காரணமாகும்.

பசில் ராஜபக்ஸவை நிதி அமைச்சராக்கினால் பொருளாதாரத்தை தூக்கி நிறுத்துவார் என்று கூறப்பட்டு, அவரை நாடாளுமன்ற உறுப்பினராக உள்வாங்கி, நிதி அமைச்சராக்கப்பட்டதன் பின்னரும் எவ்வித முன்னேற்றமும் ஏற்படவில்லை. தற்போது சடுதியாக இடம்பெற்று வரும் பொருளாதார வீழ்ச்சிக்கு



பசில் ராஜபக்ஸவே காரணம் என்றே விமர்சிக்கப்படுகின்றது. இலங்கை பொருளாதாரத்தின் எதிர்காலம் இருண்டதாக உள்ளதென சர்வதேச நாணய நிதியத்தின் நிறைவேற்று சபை அண்மையில் தெரிவித்துள்ளது. தாங்கிக் கொள்ள முடியாத அளவிற்கு இலங்கையின் பொதுக் கடன் அதிகரித்துள்ளதாக சர்வதேச நாணய நிதியம் சுட்டிக்காட்டியுள்ளது.

இலங்கை தொடர்பான விசாரணை பெறுபேற்று அறிக்கையிலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது. இன்றைய பொருளாதார பிரச்சினைக்கு சர்வதேச நாணய நிதியத்தை நாடுவதைத் தவிர வேறு வழியில்லை என முன்னாள் பிரதமர் ரணில் விக்ரமசிங்க உள்ளிட்ட பலரும் அரசாங்கத்திற்கு ஆலோசனை கூறுகின்ற போதும் அரசாங்கம் அதில் கவனம் செலுத்தவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. எனினும், அடுத்த வாரத்தில் சர்வதேச நாணயநிதியத்துடன் அரசாங்கம் கலந்துரையாடல் ஒன்றை நடத்தவிருப்பதாக செய்திகள் வெளியாகியுள்ளன. நாட்டில் நிலவும் பொருளாதார நெருக்கடியை சமாளிக்கப் பொதுமக்கள் மீது பாரிய சுமைகளை ஏற்படுத்தியுள்ளது அரசாங்கம். விலை உயர்வுகள் மேற்கொள்ளப்படுவதென்பது இயல்பானதே. அவை எந்தளவில் மேற்கொள்ளப்படுகின்றன என்பதிலும், எவ்வளவு காலத்திற்கொருமுறை விலை உயர்வுகள் அறிவிக்கப்படும் என்பதிலும் ஒரு முறைமை உள்ளது. ஆனால், அண்மைய நாட்களில் அறிவிக்கப்பட்டு வரும் அத்தியாவசிய பொருள்களுக்கான விலை உயர்வுகள் இலங்கை வரலாற்றில் ஒருபோதும் இல்லாதவை என்றே கூற வேண்டும். அத்தியாவசியப் பொருள்கள் என்ற வகையில், மக்களின் அன்றாட உணவுப்பொருள்களின் விலைகள் என்றுமில்லாதவாறு அதிகரித்துள்ளன. அரிசி விலை கட்டுப்பாடின்றி உள்ளது. கோதுமை மாவின் விலை பல தடவைகள் அதிகரிக்கப்பட்டு தற்போது திடீரென அதன் விலை 35 ரூபாவால் உயர்த்தப்பட்டுள்ளது. இதன் காரணமாக, 450 கிராம் நிறையைக் கொண்ட பாணின் விலை 30 ரூபாவினால் அதிகரிக்கப்பட்டுள்ளது. சில மாதங்களில் முன்னர் 60 ரூபாவாக இருந்த பாணின் விலை தற்போது 110 ரூபாய். கோதுமை மாவும், பாண் போன்ற உணவுப் பொருள்களும் மிக சாதாரண மக்களின் உணவாகும். இவற்றின் விலைகள் உயர்வினால் வறிய மக்கள் நேரடியாகப் பாதிக்கப்படுகின்றனர். மருந்துப் பொருள்களின் விலைகளும் 29 சதவீதத்தால் அதிகரிக்கப்பட்டுள்ளது.

எரிபொருள் விலைகளும் அதிகரிக்கப்பட்டுள்ளன. இறுதியாக மேற்கொள்ளப்பட்டுள்ள எரிபொருள் விலை அதிகரிப்பை இங்கு குறிப்பிடலாம்.

ஓட்டோ டீசல் ஒரு லீற்றர் 55 ரூபாவினால் அதிகரிக்கப்பட்டுள்ளது. புதிய விலை 176 ரூபாவாகும். ஒக்டேன் 92 ரக பெற்றோல் 77 ரூபாவினால் அதிகரிக்கப்பட்டுள்ளது. புதிய விலை 254 ரூபாவாகும். ஒக்டேன் 95 ரக பெற்றோல் 75 ரூபாவினால் அதிகரிக்கப்பட்டுள்ளது. புதிய விலை 283 ரூபாவாகும். சூப்பர் டீசல் 95 ரூபாவினால் அதிகரிக்கப்பட்டுள்ளது. புதிய விலை ரூபா 254 ரூபாவாகும்.

எரிபொருள் விலை உயர்வு காரணமாகப் போக்குவரத்துக் கட்டணங்களும் அதிகரித்துள்ளன. நாட்டின் உற்பத்தி மற்றும் தொழில் முயற்சிகளுக்கு இன்றியமையாததாக உள்ள மின்சார விநியோகமும் தடைப்படுவதால், இதனாலும் சாதாரண பொதுமக்களே அதிகம் பாதிக்கப்பட்டுள்ளனர். ஒரு நாளில் ஏழரை மணித்தியாலம் மின்சாரம் தடை செய்யப்படுகின்றது. ஒரு நாளில் வேலை நேரம் 8 மணித்தியாலங்கள் ஆகும். ஏழரை மணித்தியாலம் மின் விநியோகம் தடைசெய்யப்பட்டால் என்ன நடக்கும்?

பாதிக்கப்படும் மக்களுக்கு நிவாரணம் வழங்கப்படும் என்று அரசாங்கம் கூறுகின்றது. மக்களுக்குத் தேவையான நிவாரணங்களை விரைவில் பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படுமென நிதி அமைச்சர் பசில் ராஜபக்ஸ தெரிவித்துள்ளார்.

இது நகைப்பிற்குரிய கருத்தாகவே பார்க்கப்படுகின்றது. பொதுமக்களின் அன்றாட உணவுப்பொருள்களின் விலைகளை அதிகரிக்காமல் விட்டாலேயே அது அவர்களுக்கான நிவாரணமாக இருக்கும். அதனை விடுத்து பாதிக்கப்படும் மக்களுக்கு நிவாரணம் வழங்குவதென்பது எவ்வாறு எனத் தெரியவில்லை.

வடக்கு கிழக்கில் வாழும் தமிழ் மக்களுக்குக் கடந்த காலங்களில் பாரிய தடைகளுக்கும் சவால்களுக்கும் முகம் கொடுத்து வாழ்ந்த அனுபவம் உள்ளது. ஆனால் தென்னிலங்கை சிங்கள மக்களுக்கு இன்றைய நிலை அதிர்ச்சி தரும் புதிய அனுபவமாகவே உள்ளது.

அனைத்துக் கட்சிக் கட்சி மாநாடு ஒன்றை நடத்தி பொதுத் தீர்மானம் ஒன்றை மேற்கொள்ள அரசாங்கம் யோசித்து வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. இது அரசாங்கம் பிரச்சினைகளிலிருந்து தப்பித்துக்கொள்ளும் வழிமுறை போன்றே தோன்றுகின்றது. அத்துடன், நாட்டில் இன்று ஏற்பட்டுள்ள பொருளாதார பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு என ஜனாதிபதி தலைமையில் பொருளாதார பேரவை ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. நிதி அமைச்சர் பசில் ராஜபக்ஸவும் அதில் இருக்கின்றார். நாட்டின் பொருளாதார வீழ்ச்சிக்குக் காரணமானவர்களே பொருளாதாரப் பேரவைக்கு நியமிக்கப்பட்டுள்ளதாக எதிர்கட்சிகள் குற்றம்சாட்டியுள்ளன. உண்மையில் அவ்வாறான பொருளாதாரக் குழுவொன்று அமைக்கப்பட வேண்டுமானால் பொருளாதார நிபுணர்களை உள்வாங்கி அமைக்கப்பட்டிருக்க வேண்டும். எனவே எல்லாம் வெறும் கண்துடைப்பாகவேதான் நடைபெற்று வருகின்றது.

இந்தப் பாரிய சுமைகளிலிருந்து பொது மக்கள் எவ்வாறு விடுபட முடியும் என்பது தான் தற்போதுள்ள விடைதெரியாத கேள்வியாக உள்ளது.


CEDARGREEN COIN LAUNDRY & DRY CLEAN DEPOT
" VERY CLEAN LAUNDRY" Avoid The Rush ..... Come during weekdays!
• Large laundry Folding Tables, Lots of Space • We offer wash, Dry & fold at .99Cents /lb
Commercial
. We Clean Commercial Linens, Aprons, & Towels • We Clean Uniforms Dry Clean or Wash & Dry
. We Clean Towels/Sheets from Daycare, Clinics, Hair Saloon, Nail Spa, Restaurants etc
STORE Tel: 416-289-7514

OPEN DAILY 8 am – 11 pm
Sat. & Sun 7 Am – 11 pm
(Near Bellamy & Lawrence – find us in GOOGLE !!) 3340 Lawrence Ave. East, Unit 5, Scarborough, ON M1H 1A7

# இன்னல் நீக்கும் இயற்கை - 85



- அகணி -
authorakani@gmail.com

கடுக்காயிலுள்ள மருத்துவக்குணம் பற்றி நாங்கள் இந்தத் தொடர் கட்டுரையில் முன்பு உரையாடியிருந்தாலும் மீண்டும் அதுபற்றி உரையாடலாம் என எண்ணுகிறேன். இரவில் நித்திரைக்குப் போகமுன்பு கடுக்காய்த் தூள் ஒரு தேக்கரண்டி அளவு வெந்நீரில் கலந்து சாப்பிட்டு வந்தால் உடலில் உள்ள கபம் சமன் செய்யப்படும். இது உடலில் மலச்சிக்கலையும் தடுத்துக் கொள்ளும். கடுக்காயில் உள்ள மருத்துவக்குணம் பற்றி ஆயுர்வேதத்திலும், சித்த மருத்துவத்திலும் கூறப்பட்டுள்ளது. கடுக்காய் மனநலத்துக்கும் மிகவும் பயனளிக்கும். கடுக்காய் உடலில் உள்ள நச்சுத்தன்மையைப் போக்கும் தன்மை கொண்டது. கடுக்காய்ப் பொடியைச் சம அளவு நெய்யில் வறுத்து, உப்புடன் கலந்து இரண்டு கிராம் அளவு சாப்பிட்டு வந்தால், வயிற்றுப் புண் குணமாகும். கடுக்காயின் மேற்புற தோல் ஓடுகள் மட்டுமே மருத்துவ குணம் கொண்டவை. அதன் விதைகள் சிறிது நச்சு தன்மை வாய்ந்தவை என்பதால் அவற்றைப் பயன்படுத்தக்கூடாது.

வாயிலும் தொண்டையிலும், இரைப்பையிலும், குடலிலும் உள்ள புண்கள் ஆற்றிடும் வல்லமை பெற்றது. மலச்சிக்கலைப் போக்கி குடல் சக்தியை ஊக்கப்படுத்தும். பசியைத் தூண்டி இரத்தத்தைச் சுத்தப்படுத்தி வாத பித்த கபம் ஆகியவற்றால் வரும் பல நோய்களைக் குணப்படுத்தும்.

கடுக்காய் காது நோயினைக் குணப்படுத்தும். கடுக்காய் வலிமையூட்டி, நீர் பெருக்கி, புண்கள், கண்நோய், இருமல், காமாலை, கை கால் நமச்சல், இரைப்பு, நாவறட்சி, மார்பு நோய், மூலம், வயிற்றுப்பொருமல், விக்கல் போன்றவற்றை குணப்படுத்தும்.

கடுக்காய்ப் பொடியினை இரண்டு கிராம், தண்ணீருடன் மாலையில் அருந்திவந்தால், மஞ்சள் காமாலை நோய் நீங்கும். மேலும், இரத்தக் குறைவு, கை கால் எரிச்சல், தோலின் வெண் புள்ளிகள் ஆகியனவும் குணமாகும்.

கடுக்காய்ப் பொடியினால் பல் துலக்கினால், ஈறு வலி குணப்படுவதோடு ஈறில் இருந்து வரும் இரத்தம் தடைப்படும். கடுக்காய் பல்லினை உறுதிப்படுத்தும்.

இருபத்தைந்து கிராம் கடுக்காய்ப் பொடியில், ஒரு ரம்ளர் நீர்விட்டுக் கொதிக்கவைத்து ஐம்பது மில்லி லீற்றர் வற்றவைத்துப் பருகினால், கண் நோய், சர்க்கரை நோய் கட்டுப்படும்.

காயங்களில் நுண்கிருமிகள் தொற்றாதவாறு பாதுகாப்பது அவசியமாகும். இரத்தக் காயம் ஏற்பட்டு இரத்தம் வடிவது நின்ற பிறகு, அந்தக் காயத்தின் மீது கடுக்காய்ப் பொடியைத் தூவுவதால் கிருமித் தொற்றுகளில் இருந்து பாதுகாப்பளிக்கும். ஏற்கனவே இருக்கும் புண்களின் மீதும் கடுக்காய் பொடியைத்



தூவி வந்தால் புண்கள் சீக்கிரம் ஆறும். கடுக்காய் தோலினைச் சிறிதளவு எடுத்து அதனுடன் இஞ்சி, மிளகாய், புளி, உளுத்தம் பருப்பு ஆகியவற்றை சேர்த்து நெய்யில் வதக்கி சிறிது உப்பு சேர்த்து சாப்பிட்டு வந்தால் ஜீரண சக்தி மேம்படும். வயிற்றில் இருக்கும் நச்சுக்கள் நீங்கி வயிறு சுத்தமாகும்.

மனிதரின் உடலில் வாதம், பித்தம், கபம் ஆகிய மூன்று தோசங்கள் உள்ளன. இவை அதிகமாகும் பொழுது உடலில் பாதிப்புக்கள் ஏற்படுகின்றன. கடுக்காய்த் தூளில் பத்து கிராம் அளவு எடுத்துக்கொண்டு, அதே அளவு சுக்கு, திப்பிலி தூள்களை கலந்து தினமும் காலை, மாலை என இருவேளையும் அரை தேக்கரண்டி அளவு சாப்பிட்டு வந்தால் வாத, பித்த குறைபாடுகள் அனைத்தும் நீங்கும்.

விக்கல் ஏற்படும்பொழுது கடுக்காய்த் தூளினைத் தேனில் கலந்து சாப்பிட்டால் விக்கல் நிற்கும்.

கடுக்காயினால் சமிபாட்டுச் சக்தி மேம்படும். இருமல் குணமாகும். தொண்டைக் கட்டு குணமடையும். கடுக்காய்த்தூளினை முகத்தில் பூச உடலில் உள்ள தழும்புகள் நீங்கும். மருந்துகளை உட்கொள்ளுபவர் வைத்திய ஆலோசனையின் பின்னரே இதனை அருந்தலாம்.

சிலருக்கு இதனால் அதிகமான வயிற்றோட்டம், சோர்வு, நீரிழப்பு போன்ற பிரச்சினைகள் ஏற்படும்.

கடுக்காய் விதையாகவும், கடுக்காய்த் தூளாகவும் கடைகளில் வாங்கலாம்.

இப்பொழுது கனடாவில் பிரபல்யமான மருத்துவர் போல் யோசேப் அவர்கள் எழுதிய "நலம் நலமறிய ஆவல்" என்ற நூலில் உள்ள அரிய கருத்துக்களைப் படித்த பொழுது இந்நூல் பற்றி உங்களுடன் உரையாடவேண்டும் என எண்ணுகின்றேன். இந்த நூலில் எமது உடலைப்பற்றியும், நாம் உளம், உடல் இரண்டையும் நலமாக வைத்திருப்பதற்கு வேண்டிய அறிவுரைகளை மருத்துவர் போல் யோசேப் அழகாக எடுத்துரைத்துள்ளார். இந்த நூலில் நூலாசிரியர் "கொழுப்பு அதிகமில்லாத சமச்சீர் உணவுகளை முதலில் தேர்ந்தெடுங்கள்" என்கிறார். மேலும் " நிறைய காய்கறிகள், கீரைவகைகள், முளைகட்டிய விதை வகைகள், போன்றவற்றை அதிகம் சேர்த்துக் கொள்ளுங்கள், பழங்களும், பழச் சாறுகளும் நாளாந்தம் உணவுக்கு முன்புதான் உண்ணுதல் நல்லது" என்று கூறியுள்ளார் மருத்துவர் போல் யோசேப்.

"வாழ்க்கைச் சக்கரத்தில் நாளாந்தம் உடலுக்கும், உள்ளத்திற்கும் மிக அவசியமான தற்காலிக இளைப்பாறுதல் தான் நித்திரை, தூக்கத்தின்போது உடலில் முக்கியமான உயிர் இரசாயன மாற்றங்கள், வளர்சிதை மாற்றங்கள் (Metabolism) கலங்கள் மற்றும் இழையங்களின் வளர்ச்சிகள் கலங்களிலிருந்தும் உறுப்புகளிலிருந்தும் கழிவுகளின் வெளியேற்றம், தசைகள், மூட்டுகள் போன்ற பல உறுப்புகளிற்கு சின்ன ஓய்வு போன்றவை நடைபெறுகின்றன" என்று கூறியுள்ளார் மருத்துவர் போல் யோசேப். "உடற்பயிற்சியைப் பொறுத்தவரை நீச்சலும், சைக்கிள் ஓட்டுதலும் தான் பிரதானமான மிகப் பயன்தரும் பயிற்சிகளாகும். அதற்கடுத்து நடைப்பயிற்சி, யோகாசனம் போன்றவற்றைக் குறிப்பிடலாம்" என்றும் மருத்துவர் போல் யோசேப் அவர்கள் தனது நூலில் குறிப்பிட்டுள்ளார். இந்த நூலினை எல்லோரும் வாசித்துக் கொள்வது மிகவும் பயனுள்ளதாகும் என்ற கருத்தை உங்களுடன் பகிர்ந்து கொள்கிறேன். இந்த நூலிலும்:வெள்ளம் வருமுன் அணை கட்டவேண்டும் என்பதாக உடல் நலம் பற்றி நாங்கள் ஒவ்வொருவரும் எடுக்க வேண்டிய முன்னெச்சரிக்கையான பல தரவுகள் குவிந்திருக்கின்றன.

**அன்பான விளம்பரம் வாசகர்களே!**

இயற்கை வளங்களால் எவ்வாறு இன்னல் நீங்கி வாழலாம் என்று அறியும் பொருட்டு எழுந்த தேடலால் கிடைத்த தகவல் பதிவாக அசைந்து கொண்டிருக்கும் இந்தத் தொடர்கட்டுரை எமது பொது அறிவை விருத்தி செய்யும் நோக்குடன் எழுதப்படுகின்றது. இக்கட்டுரையில் கூறப்படும் கருத்துக்கள் இயற்கை சார்ந்து இருந்தாலும் உங்கள் உடல்நிலைக் கேற்ப பொருத்தமான மருத்துவக் கருத்துக்களாக அமைந்து விடாது என்பதைக் கவனத்தில் எடுத்துக் கொள்ளுங்கள். எப்பொழுதும் பொருத்தமான வைத்திய ஆலோசனையை மேற்கொள்ளுங்கள் என்று வலியுறுத்திக் கூறிக்கொள்கின்றேன். ஆனாலும் நாம் இயற்கையோடு இணைந்து வாழ்வதற்கான தகவலையும், விழிப்புணர்வையும், ஆரோக்கியமாக வாழ்வதற்கு வேண்டிய பொதுவறிவையும் இந்தக் கட்டுரை வழங்கும் என்று நம்புகின்றேன்.

நாமும் நன்றாக வாழ்வோம். நம்மைச் சூழவுள்ளவர்களும் நன்றாகவே வாழட்டும்.



# ஆயுள் காப்புறுதி எடுக்கும்போது விடும் தவறுகள்




தனது கணவனின் மரணத்தினைத் தொடர்ந்து, ஆயுள் காப்புறுதிப் பணம் வழங்கல் நிராகரிக்கப்பட்டபோது, அந்த மனைவி துயரங்களோடு கூறியவை கனடாவின் ஆயுள் காப்புறுதி விடயங் களில் எங்கே தவறுகளை விடுகின்றோம் எனப் பாடங்களை சகலருக்கும் கற்று கொடுத்தது.

அவர்களின் கண்ணீரோடு கூறிய முறைப் பாட்டில், அவர்களையே தவறுக்குக் காரணமாகியவர்களாகக் காட்டிவிட்டு அடுத்த கட்ட முயற்சிகள் எவையினையும் மேற்கொள்ளாது, அதனை சர்வ சாதாரணமாக உதாசீனம் செய்துவிட்டுச் சென்றது அவரின் 'காப்புறுதி முகவர் நிறுவனம்' இது காப்புறுதி உடன்படிக்கை யில் சேர்த்துக் கொள்ளுங்கள் எனக் கேட்கும் முகவர்கள் சகலருக்கும் விழுந்த ஓர் அடி!

இங்கு நடந்தது என்ன?


சாதாரணமாக நோய்களினால் உடல் நிலை பாதிக்கப்பட்டோருக்கு, அவர்களின் உண்மையான நிலைமைகளை எதுவித மான ஒளிவு மறைவுகளுமின்றி, நேர்மையாகப் பிரகடனப்படுத்தி அவர்களின் உடல் நிலைகளுக்கு ஏற்ற மாதிரிக் கட்டணம் நிர்ணயிக்கப்பட்டு, தொடர்ந்து எதுவிதமான புலன் விசாரணைகளும் இல்லாது நம்பிக்கையின் அடிப்படையில் சேர்ந்து கொள்ளும் காப்புறுதி உடன்படிக்கையில் இத் துயரம் நடந்தது.

மனுச் செய்தபோது விண்ணப்பத்தில் இப்படியொரு கேள்வி இருந்தது. அங்கு கேட்கப்பட்ட அதே ஆங்கில வசனமும் அதற்குரிய தமிழ்மொழி பெயர்ப்பும் பின்வருமாறு: In the past two years, have you been diagnosed or hospitalized for any of the following conditions such as Heart Attack, Stroke, Cancer, Leukemia, Chronic Kidney disease?

கடந்த இரு வருடங்களில் பின்வரும் நோய்களில் ஏதாவது ஒன்றினால் பாதிக்கப்பட்டு வைத்தியசாலையில் தங்கியிருந்து சிகிச்சை பெற வேண்டிய நிலைமை ஏற்பட்டதா? இருதயம் சம்பந்தப்பட்ட நோய்கள், புற்றுநோய், பாரிசவாதம், நாட்பட்ட சிறுநீரக நோய் போன்றவையாகும்.

காப்புறுதி விண்ணப்பத்தில் அவர் அதற்கு "இல்லை" என்ற பதிலை வழங்கி யிருந்தார்.

ஆனால் அவரின் மரணத்தின் பின்பு காப்புறுதிக் கம்பனி மேற்கொண்ட புலன் விசாரணையில் மேற்குறிப்பிட்ட நோய் களில் ஒன்றின் காரணமாக, குறிப்பிட்ட அந்த மனிதர் இரு வருடங்களிற்கு முன்னர் ஒரு கிழமை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்த விடயம் அவரது மரணத்தின் பின்பு



தெரியவந்தது. உண்மை மறைக்கப்பட்ட விடயம் மோசடியாகக் கருதப்பட்டு நட்டஈடு கோரல் நிராகரிக்கப்பட்டது.

பொதுவாகக் காப்புறுதியின் அடிப்படை கோட்பாடுகளின்படி எந்தவிதமான காப்புறுதி உடன்படிக்கைகளில் சேரும் போதும் நேர்மையாக, உண்மையாக, அதற்கு ஒருபடி மேல் சென்று விசுவாசமாக எதுவித ஒளிவு, மறைவு எதுவும் இல்லாது தகவல்கள் யாவும் வழங்கப்படல் வேண்டும்.

அந்த நேர்மை, உண்மை என்ற கோட்பாட்டினைப் பின்பற்றி காப்புறுதி உடன்படிக்கைகள் செய்யும் எவரையும் கனடியன் சட்டங்களும் நீதித் துறைகளும் என்றும் பாதுகாக்கும் என்பது காப்புறுதியின் தத்துவமாகும்.

மருத்துவப் புலன் விசாரணைகள் எவையுமின்றி வழங்கும் இக்காப்புறுதித் திட்டத்தில், காப்புறுதிக்கு உரியவர் தகவல் ஒன்றினை தெரியப்படுத்தத் தவறினாரோ அல்லது முகவர் அதனை சரியாக உள்வாங்கிக் கொள்ளத் தவறினாரோ என்பது சரியாகத் தெரியவில்லை. ஆனால் விண்ணப்பத்தில் கேட்கப்பட்ட மருத்துவ ரீதியான ஒவ்வொரு வினாவுக்கும், சரியான பதில் வழங்கப்பட்டதா? என்பதில் சந்தேகம் எழுந்தால் குடும்ப மருத்துவர் மூலம் உறுதி செய்துவிட்டு சமர்ப்பிப்பது காப்புறுதி முகவர் தொழிலில் உள்ள எம்போன்ற வழமையாகும்.

இவ்வாறு நிராகரிக்கப்பட்டவர்களின் அடுத்தகட்ட நடவடிக்கை என்ன?


ஒவ்வொரு காப்புறுதிக் கம்பனியினுள்ளும் வாடிக்கையாளர்கள் பிரச்சனைகளை சட்டரீதியாக அலசி ஆராய்ந்து தீர்வு வழங்க என ஒரு நியாய மன்றம் (Company Ombudsman Office) இயங்கிக் கொண்டிருக்கின்றது. அங்கு தங்கள் பக்க நியாயங்களை சமர்பிக்க வேண்டும். அவர்கள் மீண்டும் ஒருமுறை அலசி ஆராய்ந்து தீர்வு வழங்குவர். அங்கும் சாதகமான தீர்வு கிடைக்காவிட்டால் செல்ல வேண்டிய மாகாண அரச நிர்வாகத்தில் ரொறொன்ரோவில் இயங்கும் நியாய மன்றம் இதுவாகும். அதன் முகவரி பின்வருமாறு:

Ombud Service For Life & Health Insurance
20, Adelaide Street East # 802
Toronto, ON M5C 2T6
PHONE: 1-888-295-8112
Website: www.olhi.ca

இங்கு குறிப்பிடவேண்டிய முக்கியமான விடயம் யாதெனில் வழங்கவேண்டிய நிவாரணத்தினை நிராகரிக்கும் காப்புறுதிக் கம்பனியே நியாயம் தேடும் வழிமுறைகளையும் குறிப்பிட்டு கடிதம் அனுப்பும்.

அரச நியாய மன்றங்களிலும் சாதகமான தீர்வு கிடைக்கா விட்டால் நீதிமன்றம்வரை செல்பவர்களும் உண்டு. உதாரணமாக கனடாவில் காப்புறுதிப் பணம் நிராகரிப்பில் நீதிமன்றம் வரை சென்ற Tailor VS National Insurance Company Of Canada என்ற வழக்கில் உயர் நீதிமன்றம் மோசடியாகத் தகவல் மறைக்கப்பட்டது என்ற குற்றசாட்டினை ஏற்று நிவாரணம் வழங்குவதனை நிராகரித்திருந்தது.

இதிலிருந்து கனடாவில் ஆயுள் காப்புறுதி விடயங்களில் நாம் கற்றுக்கொள்ளும் பாடம் என்னவென்று?

சந்திரமௌலீஸ்வர சிவாலயம்

தினமும் ஆறுகால பூஜைகள் நடைபெறும்
ஆலயம் திறந்திருக்கும் நேரம்

வெள்ளி, சனி, ஞாயிறு மற்றும் விசேட தினங்களில்: காலை 7am - மாலை 9pm
திங்கள் - வியாழன் - காலை 7am - 2pm மாலை 5pm - 9pm

விசேட தினங்களில் பூஜை நேரங்களில் மாற்றங்கள் ஏற்படலாம். ஆலயத்தை அழைத்து பூஜை நேரங்களை நிச்சயப்படுத்திக் கொள்ளுங்கள்

Tel: 416 . 754 . 7338 / 416 .724 .7480

3011 Markham Road , Unit 62 & 63 (North of McNicoll Ave.), Scarborough


# உலக மகிழ்ச்சி தினம்

எத்தனை கோடி பணமிருந்தாலும்
எத்தனை சொத்துக்கள் சேர்த்திருந்தாலும்
எத்தனை சொந்தங்கள் நிறைந்திருந்தாலும்
எத்தனை பதவிகள் வகித்திருந்தாலும்
எத்தனை விருதுகள் பெற்றிருந்தாலும்
எவ்வளவு புகழ் அடைந்திருந்தாலும்
அவ்வளவும் வீணாகிடும் மனதில்
எள்ளளவு மகிழ்ச்சி இல்லையெனில்.



20 March 2021

நம்மைப் பிறரோடு ஒப்பிடாமல்,
நம்மிடம் இருப்பதே போதுமென்றும்
நம்மிடம் இருப்பதைப் பகிர்ந்திடும்போதும்
நம்முள் மகிழ்ச்சி நிறைந்திடுமே.

பிறர்க்குதவுதலில் மகிழ்ச்சியுண்டு
உறுபசி தீர்த்தலில் மகிழ்ச்சியுண்டு
கற்றற்குதவுதலில் மகிழ்ச்சியுண்டு
உறுபிணி தீர்த்தலில் மகிழ்ச்சியுண்டு

உயிர்காத்தலில் மகிழ்ச்சியுண்டு
ஆதரவற்றோர்க்குதவுதலில்
ஆயிரம் மடங்கு மகிழ்ச்சியுண்டு
பிறர் மனம் புண்படாமல், இன்சொல்

பேசி, நடத்தலில் மகிழ்ச்சியுண்டு
சாதி, இனம், மொழி, மதமென்று
வேற்றுமை எதிலும் பாராமல்,
ஏழை, பணக்காரன் எனும்

ஏற்றத்தாழ்வுகள் பாராமல்,
மனித இனத்தோர் அனைவரையும்
மனதில் சமமாய் நினைத்தபடி
நீதி நெறிப்படி வாழ்வதில்தான்
நெஞ்சில் மகிழ்ச்சி நிறைந்திடுமே.

மகிழ்ச்சி எங்கே உள்ளதென்று
மற்றவை எதிலும் தேடாதீர்.
மகிழ்ச்சி மனதில் இருந்துவிட்டால்
மற்றவை எல்லாம் மகிழ்வாகும்.

சிலேடை சித்தர் சேது சுப்ரமணியம்

# கடைசி விவசாயி - திரைவிமர்சனம்




காக்காமுட்டை படத்தின் இயக்குநரின் நாலாவது படம் இது. இவ்வருடம் வெளியான இப்படம் மாயாண்டி என்ற ஒரு விவசாயியைப் பற்றிய கற்பனைக் கதை.

கதைக்களம் புதிது அல்ல. ஒரு கிராமத்தில் 85 வயதான மாயாண்டி விவசாயம் செய்து வருகிறார். கிராமத்து மக்கள் வறட்சியால் தங்களது விவசாய நிலங்களை விற்று விட்டு வேறு தொழில்கள் செய்கின்றனர். ஆகவே மாயாண்டியே அந்த ஊரில் விவசாயம் செய்து கொண்டிருக்கும் கடைசி விவசாயி ஆவார். அவரும் பண்டைய காலத்து வழக்கத்தில் வீட்டில் மின்சாரம் இல்லாமல் இயற்கையாக வாழ்ந்து வருகிறார்.

இவ்வேளையில், ஒருநாள் மாயாண்டி தனது தோட்டத்திற்கு செல்லும்போது அங்கு மூன்று மயில்கள் இறந்து இருப்பதைக் காண்கிறார். அவற்றின் நிலையைக் கண்டு வருந்திய மாயாண்டி அவற்றை தோட்டத்திற்கு அருகில் புதைத்து விடுகிறார். இச்செயலால் மாயாண்டிக்குப் பின்னர் பிரச்சனை வருகிறது. இந்தியத் தேசியப் பறவையான இந்த மயில்களை மாயாண்டி கொன்றார் என்று குற்றம் சாட்டப்பட்டு அவர், சிறையில் இடப்படுகிறார்.



அவருக்கு விடுதலை கிடைக்குமா? இவ்வருடம் அவர் வளர்த்த பயிர்கள் காக்கப்படுமா அல்லது அவரது பராமரிப்பில்லாமல் அழிந்து விடுமா? என்பதைப் படத்தைப் பார்த்து அறியுங்கள். விவசாயிகளின் கஷ்டங்களைப் பற்றித் தமிழில் பல திரைப்படங்கள் வந்துள்ளன. ஆனால், இப்படம் பிற படங்களைவிடப் பெரிதும் மாறுபடுகிறது.

கதாநாயகன் எனக் கருதப்படுகிறவர் ஒரு முதிய விவசாயி. தெரிந்த முகம் அல்ல. சிறு பாத்திரங்களில் வரும் விஜய் சேதுபதியையும், யோகி பாபுவையும் தவிட வேறுயாரும் பிரபல நடிகர்கள் இப்படத்தில் இல்லை. பலர் படம் எடுக்கப்பட்ட கிராமத்தையே சேர்ந்தவர்கள்.

மாயாண்டியும் வயதானவர் என்றாலும், அவர் அனுபவிக்கும் கஷ்டங்களைக் கண்டு அஞ்சாமலும் புலம்பாலும் அமைதியாக அவற்றை ஏற்பது சிறப்பாக இருக்கிறது. அனுபவத்தாலோ, காது கேளாமையாலோ தெரியவில்லை படம் முழுக்க மாயாண்டி இவ்வாறே அமைதி யாகக் காட்டப்படுகிறார். இது பார்வை யாளர்களுக்கு நன்றாகவே தோன்றுகிறது.

மாயாண்டியைப் போலவே படமும் அமைதியாகச் செல்கிறது. பிற விவசாயப் படங்களைப்போல வில்லனோ, சோகக் காட்சியோ, நீண்ட உரைகளோ,



பாட்டுகளோ இதில் இல்லை. இதனால் படத்தின் கருத்தைப் பார்வையாளர்களால் தடையின்றி உணர முடிகிறது. உதாரணத்திற்கு இயற்கையாகத் தயாரிக் கப்படும் கிருமி நாசினி பற்றிய கருத்துகள் அதிக உரைகள் இல்லாமல் காட்சிகள் மூலமாக இலகுவாக உணர்த்தப்படுகின்றன.

இயற்கையைச் சார்ந்த வாழ்வின் முக்கியத்துவத்தை அதிக வசனங்கள் இல்லாமல் இலகுவாக உணர்த்தும் இப் படத்தை அனைவரும் பார்க்க வேண்டும்.

# மார்க்சியம் ஒரு வரலாற்றுத் தேவை - நேர்காணல்: எழுத்தாளர் இந்திரா பார்த்தசாரதி

**நேர்கண்டவர்: கண்ணன்**


தற்கால தமிழ் எழுத்தாளர்களில் வித்தியாசமானவர் இந்திரா பார்த்தசாரதி. ஓய்வுபெற்ற தமிழ் பேராசிரியர், நாடக ஆசிரியர், ஆராய்ச்சியாளர், அரசியல் விமர்சகர் எனப் பன்முகம் கொண்டவர். இந்திரா பார்த்தசாரதியைத் தெரியாதவர் களுக்கும் கூட அவரது 'குருதிப்புனல்' நாவல் தெரிந்திருக்கும். நாவல்கள், குறுநாவல்கள், நாடகங்கள், சிறுகதைகள், கட்டுரைகள் என ஏராளம் எழுதி யிருக்கிறார். அங்கதசுவை பரிமளிக்கும் உரைநடை இந்திரா பார்த்தசாரதியின் தனிச் சிறப்பு.

நாடக உலகுக்கு ஆற்றிய சேவைக்காக இவருக்கு இந்திய ஒன்றிய அரசின் உயரிய விருதான 'சங்கீத நாடக அகாதமி விருது' கொடுக்கப்பட்டுள்ளது. 'சாகித்ய அகாதமி விருது'ம் பெற்றுள்ளார். 'மழை', 'போர்வை போர்த்திய உடல்கள்', 'நந்தன் கதை' இவரது முக்கிய நாடகங்கள். பாண்டிச்சேரி பல்கலைக்கழக நாடகத்துறை இயக்குநராக சிலகாலம் பணியாற்றியுள்ளார்.

இந்திரா பார்த்தசாரதியை சென்னையில் ஆழ்வார்பேட்டையிலிருக்கும் அவரது வீட்டில் இந்த பேட்டிக்காக சந்தித்தோம். ரீசேர்ட்டுடன் ஓர் இளைஞனைப் போல் உற்சாகத்துடன் இருந்தார்.

இனி இந்திரா பார்த்தசாரதி...

இந்திரா பார்த்தசாரதி: சென்னையில் பிறந்து, கும்பகோணத்தில் படித்தவன் நான். கொஞ்சம் வசதியான குடும்பம் என்பதால் வீட்டுக்கு ஆசிரியரை வர வழைத்து வீட்டிலேயே படிக்க வைத்தனர். எஸ்.எஸ்.எல்.சி.யின் போதுதான் பள்ளிக் கூடம் சென்றேன். அப்புறம் அண்ணா மலை பல்கலைக்கழகத்தில் தமிழ் எம்.ஏ. சேர்ந்தேன். மூன்று மாதங்களுக்குப் பிறகே என் அப்பாவுக்கு நான் தமிழ் படிக்கத் தொடங்கிய விஷயம் தெரியும். ஏன் என்று கேட்டார். தமிழ்நாட்டில் அப்போது வேலைக்கு தமிழ் உத்தரவாதம் இல்லாத ஒரு படிப்பு. நான் தமிழை முறையாகப் படிக்க வேண்டும் என்கிற என் விருப்பத்தை சொன்னேன். விட்டு விட்டார். பல்கலைக்கழகத்தில் எனக்கு எழுத்தாளர் நகுலன் 'ரூம்மெட்'.



எம்.ஏ. முடித்தபிறகு கொஞ்சக் காலம் பம்பாயில் வேலையில்லாமல் சுற்றிக் கொண்டிருந்தேன். அப்போது திருச்சி நேசனல் கல்லூரியில் தமிழ் படித்த ஒரு பிராமணர் தேவைப்பட்டார். நான் போய் அதில் சேர்ந்தேன். அன்று எனக்கு இருபத்திரண்டு வயது. மூன்று வருஷம் அங்கே இருந்தேன். ஒருமுறை ஆர். வெங்கட்ராமன் கல்லூரிக்கு வந்தார். அப்போது அவர் எம்.பி.யாக இருந்தார். டில்லியிலுள்ள மதராஸி அமைப்புக்கும் அவர் 'சேர்மேன்'. அந்த அமைப்பு நடத்து கின்ற ஒரு பள்ளிக்கு வருகிறாயா என்று என்னைக் கேட்டார். கல்லூரியிலிருந்து ஸ்கூலுக்குப் போக வேண்டும். ஆனால், எனக்கு அப்போது திருச்சியை விட்டுப் போனால் போதும் என்றிருந்தது. 'நேசனல் காலேஜ்' அவ்வளவு கட்டுப்பாடுகள் உள்ள கல்லூரி. அக்கிரகாரத்திலிருந்து வெளியே வர வேண்டும் என்று விரும்பிய எனக்கு, 'நேசனல் காலேஜ்' இன்னொரு அக்கிரகாரத்தில் மாட்டிக்கொண்டது போலாகி விட்டது. எனவே, டில்லிக்குப் போனேன். 1955இலிருந்து 1988வரை அங்கே இருந்தேன். இடையில் ஐந்து வருடம் போலந்தில் வார்சா பல்கலைக் கழகத்திலிருந்தேன்.

பாண்டிச்சேரி பல்கலைக்கழகத்தில் வேங்கட சுப்பிரமணியன் துணை வேந்தராக இருந்தபோது என்னைக் கூப்பிட்டார். நான், "தமிழ்த்துறை என்றால் வேண்டாம். அலுத்துவிட்டது. வேறு ஏதாவது இருந்தால் சொல்லுங்கள்" என்று சொன்னேன். "என்ன செய்யலாம்" என்று கேட்டார். "நாடகத்துறை ஆரம்பிக்கலாம்" என்று சொன்னேன். நான் எதிர்பார்க்க வில்லை. ஆறு மாதங்களுக்குப் பிறகு அவரிடமிருந்து ஒரு கடிதம் வந்தது. 'நாடகத்துறை ஆரம்பிக்கலாம் என்றிருக்கி றோம். கமிட்டிக்கு நீங்கள் தான் தலைவர் புறப்பட்டு வாருங்கள்' என்று குறிப்பிட்டிருந்தார். உடனே பாண்டிச்சேரி வந்தேன்.

பாண்டிச்சேரி பல்கலைக்கழக நாடகத் துறையை நான் தான் உருவாக்கினேன். இன்றும் பாண்டிச்சேரியில் நாடக இயக்கம் நன்றாக இருக்கிறது என்பதிலும் அங்கிருந்து வரும் மாணவர்கள் வெளியே யும் பரவலாக அறியப்பட்டிருக்கிறார்கள் என்பதிலும் எனக்கு மிகவும் சந்தோஷம். பாண்டிச்சேரி பல்கலைக்கழகத்தில் என்னுடைய பதவிக்காலம் ஐந்து ஆண்டுகள். ஆனால், நான்காவது வருடத்திலேயே என் மனைவி இறந்து விட்டதால், விட்டுவிட்டு வந்துவிட்டேன்.

மனைவியின் மறைவு என் வாழ்க்கையை அப்படியே முற்றிலும் வேறானதாகப் புதிய ஒன்றாய் மாற்றிவிட்டது. பெண்களும் பையனும் வெளிநாடுகளிலிருந்தனர். எனவே, ஒவ்வொருத்தர் வீட்டிலும் கொஞ்ச கொஞ்ச நாட்கள் என்று கிட்டத் தட்ட அப்புறம் நாடோடி ஆகிவிட்டேன். இப்போது சென்னையிலேயே இருக்கி றேன். இதுதான் என் முன் கதை. இனி உங்கள் கேள்விகளைக் கேளுங்கள்!

விளம்பரம்: எஸ்.எஸ்.எல்.சி.யில் எழுத்தாளர் தி. ஜானகிராமன் உங்களுக்கு ஆசிரியர் அல்லவா? அந்த நாட்கள் பற்றி சொல்லுங்கள்?

இந்திரா பார்த்தசாரதி: ஆமாம். அந்த ஒரு வருடம் தான் அவர் அந்தப் பள்ளிக்கூடத்தில் வாத்தியாராக இருந்தார். அப்புறம் போய்விட்டார். அந்த வகையில் நான் அதிர்ஷ்டசாலி. அப்போது அவர் ஓர் எழுத்தாளராக அவ்வளவாகப் பிரபலமாகி இருக்கவில்லை. ஆனால், 'கிராம ஊழியன்' பத்திரிகையில் அவரது 'அமிர்தம்' நாவல் தொடராக வெளியாகிக் கொண்டிருந்ததால், பள்ளிக்கூடத்தில் பரவலாக அவரை எல்லோருக்கும் தெரியும். எங்களுக்கு, 'நமது ஆசிரியர் ஓர் எழுத்தாளர்' என்று அவர் மேல் ஒரு விதமான ஈடுபாடு இருந்தது. ஜானகிராமன் அங்கே கணக்கு வாத்தியார். கணக்கு

தொடர்ச்சி 11ஆம் பக்கம்...)

## இரண்டு...

02ஆம் பக்கத்தொடர்ச்சி

கனடியரிடையே Angus Reid நிறுவனம் நடத்திய கருத்துக்கணிப்பு ஒன்றின்படி கோவிட்-19 பெரும்தொற்று நோய்ப் பரவல்




மக்களை மிகவும் பிரித்து வைத்துள்ளதுடன் அவர்களின் மிக மோசமான நடத்தையையும் வெளிக் கொணர்ந்துள்ளது எனத் தெரிவித்துள்ளது. இக்கருத்துக்கணிப்பில் பங்கு பற்றியோரில் அரைவாசிக்கும் மேற்பட்டோர் தங்கள் உடல் மற்றும் மன ஆரோக்கியம் பாதிக்கப்பட்டுள்ளது என்று தெரிவித்துள்ளனர். தங்களது குடும்ப நிதி நிலைமையை கோவிட்-19 பெரும்தொற்று நோய்ப்பரவல் மோசமாகப் பாதித்துள்ளது என மூன்றில் ஒரு பங்கினரும், நன்றாக முன்னேற்றியுள்ளது என மூன்றில் ஒரு பங்கினரும் தெரிவித்துள்ளனர்.

கனடியச் சனத்தொகையில் கோவிட்-19 தடுப்பூசிகள் இரண்டையும் போட்டவர்களில் பெண்கள் 82%ஆகவும் ஆண்கள் 79%ஆகவும் உள்ளனர். கனடியச் சனத்தொகையில் 80 வயதுக்கு மேற்பட்டோரில் 97%ஆனோர் கோவிட்-19 தடுப்பூசிகள் இரண்டையும் போட்டுள்ளனர்.

## மார்க்சியம்...

10ஆம் பக்கத்தொடர்ச்சி


தவிரவும் நிறைய விஷயங்கள் பற்றி வகுப்பில் அவர் பேசுவார். கதைகள் சொல்வார். அதனால், மாணவர்களிடையே அவர் கொஞ்சம் பிரபலம். 'ஜானகிராமன் ஸார்' வகுப்பு என்றாலே கலகலப்பாக இருக்கும்.

கும்பகோணத்தில் 'தொண்டர்கடை' என்று ஒரு கடை அப்போது இருந்தது. அங்கிருந்த எழுத்தாளர்கள் எல்லாம் அப்போது அங்கேதான் கூடுவது வழக்கம். ந.பிச்சமூர்த்தி, கரிச்சான்குஞ்சு, கு.ப. ராஜகோபாலன், தி. ஜானகிராமன்; எல்லோரும் அங்கே இருப்பார்கள். அந்தக் கூட்டத்தில் ஜானகிராமன் தான் வயதில் சிறியவர். எனக்கு கொஞ்சம் தைரியம் வந்தவுடன் பள்ளிக்கூட வாத்தியார் என்ற பயம் நீங்கி அவருடன் பேச ஆரம்பித்தேன். என்னென்ன புத்தகங்கள், எந்த மாதிரி புத்தகங்கள் படிக்க வேண்டும் என்று சொல்லுவார். அவரே அனேக நேரங்களில் படிப்பதற்குப் புத்தகங்கள் தருவார்.

டில்லியிலிருந்த போது 'ஆனந்த விகடன்' பத்திரிகையில் வந்த என்னுடைய கதையைப் படித்து விட்டுக் கடிதம் எழுதியிருந்தார். அப்போது அவருக்கு நான் அவருடைய பழைய மாணவன் பார்த்தசாரதி தான் என்பது தெரியாது. பின்னாட்களில் நேரில் பார்த்தபோது, "நான் உங்களிடம் படித்தேன்" என்று என்னை நானே அறிமுகப்படுத்திக் கொண்டேன். "அப்படியா" என்று ஆச்சரியமடைந்தார்.

விளம்பரம்: நீங்களே ஓர் ஆசிரியராக ஆனபோது 'வாத்தியார்' ஜானகிராமனின் தாக்கம் உங்களிடம் இருந்ததா?

